# 26. செய்யுளியல் 24/3

(செய்யப் பெறுவது செய்யுள். பொது நிலையில் இலக்கியத்தைக் குறிக்கும். செய்தது அவ்விலக்கியத்தின் உள் இருக்கும். அதனால் செய் + உள் + இயல் என்று பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும்)

## செய்யுள் உறுப்புக்கள்

1259. மாத்திரை எழுந்தியல் அசைவகை எனாஅ,
யாத்த சீரே அடி யாப்பு எனாஅ,
மரபே தூக்கே தொடைவகை எனாஅ,
நோக்கே பாவே அளவியல் எனாஅத்
திணையே கைகோள் கூற்று வகை எனாஅக்
கேட்போர் களனே காலவகை எனாஅப்
பயனே மெய்ப்பாடு எச்சவகை எனாஅ,
முன்னம் பொருளே துறை வகை எனாஅ,
மாட்டே வண்ணமொடு யாப்பியல் வகையின்
ஆறுதலையிட்ட அந்நால் ஐந்தும்
அம்மை அழகு தொன்மை தோலே
விருந்தே இயைபே புலனே இழைபு எனாஅப்
பொருந்தக் கூறிய எட்டொடும் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே.



1. மாத்திரை - ஒலி அளவு 2. எழுத்து வகைகள் 3. அசை வகைகள் 4. யாத்த சீர் 5. அடி 6. யாப்பு 7. மரபு 8. தூக்கு 9. தொடைவகை 10. நோக்கு 11. பா 12. அளவியல் 13. திணை 14. கைகோள் 15. கூற்றுவகை 16. கேட்போர் 17. களன் 18. காலவகை 19. பயன் 20. மெய்ப்பாடு 21. எச்சவகை 22. முன்னம் 23. பொருள் 24. துறைவகை 25. மாட்டு 26. வண்ணம் என யாப்பியல் வகையால் அமைந்த இருபத்தாறு உறுப்புக்களும்; 1. அம்மை 2. அழகு 3. தொன்மை 4. தோல் 5. விருந்து 6. இயைபு 7. புலன் 8. இழைபு இவை எட்டும் செய்யுளுக்கும், செய்யுள் தொகுதிகளுக்கும் உறுப்பாம். ஆக 26 + 8 = 34 உறுப்புக்களும் என, சிறந்த புலவர் செய்தல் வன்மையால் வகுத்து உரைத்தனர். இவற்றின் விளக்கங்கள் பின்பு கூறப்பெறுவதால் இங்கு விளக்கப்பெறவில்லை. 1

### அவற்றுள் மாத்திரையும் எழுத்தியலும்

1260. அவற்றுள்
மாத்திரை அளவும், எழுத்தியல் வகையும்
மேற்கிளந்தன்ன என்மனார் புலவர்.

### அசைவகை

1261. குறிலே, நெடிலே, குறில் இணை, குறில் நெடில்,
ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரும் நிரையும் என்றிசின் பெயரே.

### அவை நேர்பு, நிரைபு எனவும் வருதல்

1262. இருவகை உகரமொடு இயைந்தவை வரினே
நேர்பும் நிரைபும் ஆகும் என்ப;
குறில்இணை உகரம் அல்வழியான.

### இயலசை, உரியசை

1263. இயலசை முதலிரண்டு; ஏனைய உரியசை.

### தனிக்குறில் அசை ஆகாத இடம்

1264. தனிக்குறில் முதலசை மொழி சிதைந்து ஆகாது.

### குற்றியலிகரம் அலகு பெறாமை

1265. ஒற்றெழுத்தியற்றே குற்றிய லிகரம்.





மாத்திரை அளவும், எழுத்தின் வகைகளும் எழுத்ததிகாரத்தில் சொல்லப்பட்டனவாக அமையும் என்று அறிவுடையோர் கூறுவர். குறில் 1, நெடில் 2, உயிரளபெடை 3, சார்பெழுத்துக்கள் 1/2, மகரக் குறுக்கம் 1/4 மாத்திரை. குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம் போன்றவை எழுத்தியல் 2
வகை.

அ,க; ஆ,கா; அணி; பலா; அல், ஆல், அணில்; குரால்; இவ்வாறு குறில், நெடில், குறில்இணை, குறில்நெடில் நேர், நிரை அசை எனப்பெயர் பெறும் 3
எனக் கூறுவர்.

குற்றியலுகரம், முற்றியலுகரம் ஆகிய இரண்டு உகரங்களோடு இயைந்துவரின் நேர்பு, நிரைபு என அசைகள் அமையும்; குற்றெழுத்தோடு உகரம் அல்லாத இடத்து. காது, காற்று; அரக்கு, மலாடு; 4

நேர், நிரை இயலசை; நேர்பு, நிரைபு உரியசை. 5

தொடர்மொழிக்கண் மொழி சிதைந்து தனிக்குறில் நேரசை ஆகாது என்றவாறு. 6

குற்றியலிகரம் ஒற்றெழுத்தைப் போன்றது; அதனால் அலகு பெறாது. 7

### முற்றியலுகரமும் அசையாகாத இடம்

1266. முற்றியல் உகரமும் மொழிசிதைத்துக் கொளாஅ
நிற்றல் இன்றே ஈற்றடி மருங்கினும்

### இருவகை உகரமும் அசையாகும் வகை

1267. குற்றிய லுகரமும் முற்றியலு கரமும்
ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே.

### முடிபு

1268. அசையும் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் உணர்த்தலும் வல்லோர் ஆறே.

### சீர்

1269. ஈரசை கொண்டும் மூவசை புணர்ந்தும்
சீர் இயைந்து இற்றது சீர் எனப் படுமே.

### இயற்சீரும் உரிச்சீரும்

1270. இயலசை மயக்கம் இயற்சீர்; ஏனை
உரியசை மயக்கம் ஆசிரிய உரிச்சீர்.

### இதுவும் அது

1271. முன் நிரை உறினும் அன்னவாகும்.

### அவற்றுள், இயற்சீர்

1272. நேர் அவண் நிற்பின் இயற்சீர் பால.



முற்றியலுகரமும் மொழி சிதைந்து நேர்பசை நிரைபசை ஆகாது; அஃது ஈற்றடிக்கண் தனியசையாகி நிற்றலும் இல்லை. 8

இருவகை உகரமும் ஒற்றொடு தோன்றித் தனியசையாக நிற்கவும் பெறும். சேற்றுக் கால்; நாணுத்தளை. 9

அசையையும், சீரையும் ஓசையொடு இணைத்து, வகுத்து உணர்த்தல் வல்லோர் நெறி. 'வேண்டுதல் வேண்டாமை யிலானடி'. 10

ஈர்அசையுடனும், மூவசையுடனும் ஓசை பொருந்தி முடிந்தது சீர் எனப்படும். தாமரை புரையுங் காமர் சேவடி. செய்ந்நன்றி. 11

இயலசை பொருந்திவரல் இயற்சீர்; தேமா, புளிமா, கூவிளம், கருவிளம்; உரியசை பொருந்தி வரல் ஆசிரிய உரிச்சீர்; ஆற்றுநோக்கு, ஆற்றுவரவு, வரகுசோறு, வரகுதவிடு. 12

நேர்பு, நிரைபு அசைகளுக்குப் பின் நிரை வந்தால் உரிச்சீராகும். யாற்றுமடை, குளத்துமடை. 13

உரியசைப்பின் நேரசைவரின் இயற்சீராகும். ஆற்றுக் கால், குளத்துக்கால். 14

### இதுவும் அது

1273. இயலசை ஈற்றுமுன் உரியசை வரினே
நிரையசை இயல வாகும் என்ப.

### சீர்வகையில், உயிர்அளபெடையின நிலை

1274. அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே.

### ஒற்றளபெடையின் நிலை

1275. ஒற்று அளபெடுப்பினும் அற்றென மொழிப.

### உரிச்சீர்

1276. இயற்சீர் இறுதிமுன் நேர் அவண் நிற்பின்
உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப.

### வஞ்சிச்சீர்

1277. வஞ்சிச் சீர் என வகை பெற்றனவே
வெண்சீர் அல்லா மூவகை யான.

### வஞ்சியுரிச்சீர் வஞ்சிப்பாவுக்காதல்

1278. தன் பா அல்வழித் தான் அடைவு இன்றே.

### வஞ்சிப்பாவில் ஏனைச்சீர்கள் வருதல்

1279. வஞ்சி மருங்கின் எஞ்சிய உரிய.

### வெண்பாவிற்கு ஒருங்கு வராத சீர்கள்

1280. வெண்பா உரிச்சீர், ஆசிரிய உரிச்சீர்
இன்பா நேரடிக்கு ஒருங்கு நிலை இலவே.



இயலசைக்குப்பின் உரியசை வரின் நிரையசை போல் கொண்டு, இயற்சீராகும் என்று கூறுவர். 15
மாங்காடு, களங்காடு, பாய்குரங்கு, கடிகுரங்கு.

உயிரளபெடை அசையாக நிற்கவும் பெறும். 'கடாஅ 16
உருவொடு', உப்போஒ என.

ஒற்று அளபெடுத்து வரினும் அசை நிலை ஆகலும் உரித்து. கண்ண் டண்ண்ணெனக் கண்டும் கேட்டும். 17

இயற்சீர் இறுதிமுன் நேர்நின்றால் வெண்பா உரிச்சீர் ஆகும் என்று கூறுவர். மாவாழ்கான், மாவருகான், 18
புலிவாழ்கான், புலிவருகான்.

வெண்சீர் அல்லாத மூவகைச் சீர் எல்லாம் வஞ்சிச்சீர் என அழைக்கப் பெறும். மாவாழ்நெறி, புலிவாழ்நெறி; பாம்புவாழ்கான், களிறுவாழ்கான். 19

வஞ்சியுரிச்சீர் வஞ்சிப்பாக்களுக்கு மட்டுமே வரும். 20
ஏனையவற்றிற்குப் பொருந்தாது.

வஞ்சிப்பாவின்கண் தன்சீர்களோடு, இயற்சீர், ஆசிரிய உரிச்சீர், வெண்சீர் போன்றன வரும். 21

வெண்பா உரிச்சீரும், ஆசிரிய உரிச்சீரும், ஆசிரியப்பாவின் ஓரடிக்கண் ஒருங்கு நிற்றல் 22
இல்லை.

### கலிப்பாவில் அவை மயங்குதல்

1281. கலித்தளை மருங்கில் கடியவும் படாஅ.

### கலிப்பாவில் நேரீற்று இயற்சீர் வராமை

1282. கலித்தளை அடிவயின் நேரீற்று இயற்சீர்
நிலைக்குரித்தன்றே தெரியு மோர்க்கே.

### அது, வஞ்சிப்பா இறுதியிலும் நில்லாமை

1283. வஞ்சி மருங்கினும் இறுதி நில்லா.

### ஓர் அசைச்சீர்

1284. இசை நிலை நிறைய நிற்குவதாயின்
அசைநிலை வரையார் சீர்நிலை பெறவே.

### அது செய்யுளில் பயிலுதல்

1285. இயற்சீர் பாற்படுத்து இயற்றினர் கொளலே
தளை வகை சிதையாத் தன்மையான.

### வெண்சீர் ஈற்றசையின் ஓர் இயல்பு

1286. வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்றே.

### ஆசிரியப்பாவில் வெண்சீர்

1287. இன்சீர் இயைய வருவதாயின்
வெண்சீர் வரையார் ஆசிரிய அடிக்கே.



கலிப்பாவில் வெண்பா உரிச்சீரும், ஆசிரிய உரிச்சீரும் ஒருங்கு நிற்றல் உண்டு. 23

கலிப்பாவிற்குரிய கலித்தளைக்கண் நேரீற்று இயற்சீர் நிற்றலுக்கு உரித்தன்று என அதைத் தெரிந்தோர் அறிவர். 24

வஞ்சிப்பாவிலும் அடியின் ஈற்றின்கண் நில்லாது நேரீற்று இயற்சீர். 25

ஓசைநிலை நிரம்ப நிற்குவதாயின் ஓர் அசையும் சீராந் தன்மையாதலை நீக்கார் என்றவாறு. நாள், மலர், காசு, பிறப்பு என வரும். 26

ஓர் அசைச்சீரை தளை வகை சிதையாத் தன்மை வேண்டுமிடத்து இயற்சீரின் ஈறுபோலக் கொள்க, என்றவாறு. 27

வெண்சீர் ஈற்றசை தளைவழங்குமிடத்து, இயற்சீர் நிரைஅசை ஈறு போன்று அமையும். 28

இனிய ஓசை பொருந்தி வருவதாயின், ஆசிரிய அடிக்கு வெண்பாவுரிச்சீர் வருதலை நீக்கார் என்க. 29

### ஆசிரியப்பாவில் வஞ்சிச்சீர்

**1288.** அந்நிலை மருங்கின் வஞ்சி உரிச்சீர்
ஒன்றுதல் உடைய ஓரொரு வழியே.

### அடியின் அளவு

**1289.** நாற்சீர் கொண்டது அடி எனப்படும்.

### அடியின் கண், தளையும் தொடையும்

**1290.** அடியுள்ளனவே தளையொடு தொடையே.

### அவை, நாற்சீரடிக்கே உரித்தாதல்

**1291.** அடியிறந்து வருதல் இல்லென மொழிப.

### பாட்டென்பதற்கு அடியின் சிறப்பே முதன்மை

**1292.** அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே.

### குறளடி

**1293.** நால் எழுத்து ஆதியாகி ஆறெழுத்து
ஏறிய நிலத்தே குறளடி என்ப.

### சிந்தடி

**1294.** ஏழ் எழுத்து என்ப சிந்தடிக்கு அளவே,
ஈர் எழுத்து ஏற்றம்அல்வழியான.



இனிய ஓசை பொருந்தி வருவதாயின், வஞ்சி உரிச்சீரும் ஒரோவழி ஆசிரிய அடிக்கண் வரும் என்க. 30

நான்கு சீர் ஒருங்கு தொடுத்து வருவதை அடி என்று கூறுவர். 31

அடியின்கண் தளையும் தொடையும் அமையும். 32

தளையும் தொடையும் நான்குசீர் அடியில் வருதலன்றி அடியின் நீங்கி வருதல் இல்லை என்று கூறுவர். 33

அடியின் சிறப்பினான் பாட்டு என்று சொல்லப் பெறும். 34

நால் எழுத்து முதலாக ஆறு எழுத்து ஈறாக ஏறிய நிலத்தில் வருவது குறளடி என்று கூறுவர். வந்து கண்டு நின்று சென்று - நாலெழுத்து. 35

சிந்தடிக்கு அளவு ஏழு எழுத்து என்று கூறுவர்; இரண்டு எழுத்து ஏற்றம் அல்லாத இடத்து.
போது சாந்தம் பொற்ப ஏந்தி - ஏழ் எழுத்து. 36

### அளவடி

1295. பத்தெழுத்தென்ப நேரடிக் களவே;
ஒத்த நாலெழுத்து ஒற்றலங்கடையே.

### நெடிலடி

1296. மூவைந்தெழுத்தே நெடிலடிக்கு அளவே;
ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப.

### கழிநெடிலடி

1297. மூவாறு எழுத்தே கழிநெடிற்கு அளவே;
ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப.

### சீர்நிலை

1298. சீர்நிலை தானே ஐந்து எழுத்து இறவாது.

### வஞ்சிப்பாவில் சீர்நிலை

1299. நேர்நிலை வஞ்சிக்கு ஆறும் ஆகும்.

### சீரின் இயல்பு

1300 எழுத்தளவு எஞ்சிய சீர்நிலை தானே
குன்றலும் மிகுதலும் இல்லென மொழிப.

### எண்ணப்படாத எழுத்துக்கள்

1301. உயிரில் எழுத்தும் எண்ணப்படாஅ,
உயிர்த்திறம் இயக்கம் இன்மையான



பத்து எழுத்து முதல் பதினான்கு எழுத்து வரை நேரடி என்ற அளவடியாகும். வளம் படு வாய் வாள் ஏந்தி ஒன்னார் - பத்து எழுத்து. 37

பதினைந்து எழுத்து முதல் பதினேழ் எழுத்து வரை நெடிலடிக்க அளவாம் என்று கூறுவர். பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட - 15 எழுத்து. 38

பதினெட்டு எழுத்து முதலாக இருபது எழுத்தளவும் கழிநெடிலடியின் இயல்பெனக் கூறுவர்.
கடுஞ்சினத்தகொல்களிறும் கதழ்பரிய கலிமாவும் - 18 எழுத்து. 39

ஒரு சீரின் கண் நிற்கும் எழுத்துக்கள் ஐந்தினைக் கடவாது. 40

இருசீர் அடிகளான் வரும் வஞ்சியடிக்கண் ஒரு சீரில் ஆறெழுத்தும் வரும். 41

எழுத்தளவு குறைந்து வந்தாலும், சீர் அளவு குறைதலும், மிகுதலும் இல்லை எனக் கூறுவர். 42

உயிர் இல்லாத எழுத்துக்கள் எண்ணப் பெறமாட்டாது அவற்றிற்கு உயிர்த்திறனும், இயக்கமும் இல்லாமையால். மெய், சார்பெழுத்துக்கள் எண்ணப் பெறா. 43

## வஞ்சியடி

1302 வஞ்சியடியே இருசீர்த்தாகும்.

## வஞ்சியடிச்சீர்

1303. தன்சீர்எழுத்தின் சின்மை மூன்றே.

## இதுவும் அது

1304. முச்சீரானும் வருமிடன் உடைத்தே.

## அசை கூன் ஆதல்

1305. அசை கூன் ஆகும் அவ்வயினான.

## சீர்கூன் ஆதல்

1306. சீர்கூன் ஆதல் நேரடிக்கு உரித்தே.

## ஐவகை அடியின் விரி

1307. ஐவகை அடியும் விரிக்குங் காலை
மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்தும்
எழுபது வகையின் வழுவில வாகி
அறுநூற்று இருபத்து ஐந்து ஆகும்மே.

## இதுவும் அது

1308. ஆங்ஙனம் விரிப்பின் அள விறந்தனவே;
பாங்குற உணர்ந்தோர் பன்னுங்காலை.



வஞ்சிப்பாவிற்குரிய அடி இரண்டு சீர்களை உடைத்து. 44

வஞ்சியுரிச்சீரின் சிறுமை மூன்றெழுத்தாகும். 'பெருந்தண்பணை பாழாக'. 45

வஞ்சியடி மூன்று சீரானும் வரும் இடன் உடைத்து. 46

உரிய சீருக்கு மேல் ஒரு அசை தனிச்சொல்லாக முன்னோ, பின்னோ வருதல் கூன் எனப்பெறும். 47

ஒரு சீரே கூனாக வருதல் நேரடிக்குஉரியதாகும். அவரே, கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை - என வரும். 48

குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்ற ஐவகை அடியையும், நாலு எழுத்து முதல் இருபது எழுத்து வரை 17 நிலத்தும் விரிக்கும் போது வழக்கில் வரும் 70 சீர்களும் குற்றமற நின்று 625 அடி வகைகளாகும். 49

இது போன்று அடி வகைகளை விரிப்பின் பல்லாயிரக் கணக்காகப் பெருகும். அதைத் தெளிவாக உணர்ந்தோர் விளக்கும் பொழுது. 50

ஐவகை அடியும் பயில்தல்

1309. ஐவகை அடியும் ஆசிரியக்கு உரிய

இதுவும் அது

1310. விராஅய் வரினும் ஒரூஉநிலை இலவே.

அவற்றில் தளை

1311. தன்சீர் வகையினும் தளைநிலை வகையினும்
இன்சீர் வகையின் ஐந்தடிக்கும் உரிய.

இதுவும் அது

1312. தன்சீர் உள்வழித் தளை வகை வேண்டா.

ஆசிரியத்தளையின் வகை

1313. சீர்இயை மருங்கின் ஓரசை ஒப்பின்
ஆசிரியத் தளை என்று அறியல் வேண்டும்.

வஞ்சித்தளைபற்றி ஒரு முடிவு

1314. குறளடி முதலா அளவடி காறும்
உறழ்நிலை இலவே வஞ்சிக்கு என்ப

வெண்பா அடியும் தளையும்

1315. அளவும் சிந்தும் வெள்ளைக்கு உரிய;
தளை வகை ஒன்றாத் தன்மையான.



நாற்சீர் அடிக்கண் வகுக்கப் பெற்ற ஐ வகை அடியும் ஆசிரியப்பாவிற்கு உரிய. 51

மேற்சொல்லப் பெற்ற ஐந்தடியும் விரவி வந்தாலும் நீக்கப்படுதல் இல்லை. 52

பாக்கள் தத்தம் சீர்வகையானும், அதன் தளைநிலை வகையானும், இனிய ஓசை ஒழுங்கினால் ஐந்தடிக்கும் உரிய. 53

தன்சீர் உள்வழி, இன்னோசைக்காக வேறு தளைவகை வேண்டுவதில்லை. சீர்தானே ஓசையைத் தரும். 54

சீர்கள் தம்முள் பொருந்தும்வழி நின்றசீரும் வரும் சீரும் ஒத்த அசையாக இருந்தால் ஆசிரியத் தளையாகும் என்று அறிதல் வேண்டும். 55

குறளடி முதலாக அளவடி வரையும் வஞ்சியுரிச்சீர் வந்து மயங்கும் நிலை இல்லை என்று கூறுவர். இங்கு இயற்சீரும் ஆசிரியவுரிச் சீரும் வரும். 56

அளவடியும் சிந்தடியும் வெண்பாவிற்கு உரிய; தளைவகை ஒன்றாத் தன்மைக்கண். 57

### கலிப்பாவிற்குரிய அடி

**1316. அளவடி மிகுதி உளப்படத் தோன்றி**
**இருநெடில் அடியும் கலியிற்கு உரிய.**

### அதற்குத் தளை

**1317. நிரை முதல் வெண்சீர் வந்து நிரைதட்பினும்**
**வரைநிலையின்றே அவ்வடிக் கென்ப.**

### இதுவும் அது

**1318. விராஅய தளையும் ஒரூஉநிலை இன்றே.**

### வெண்பா அடியும், ஆசிரிய அடியும்

**1319. இயற்சீர் வெள்ளடி ஆசிரிய மருங்கின்**
**நிலைக்குரி மரபின் நிற்கவும் பெறுமே.**

### ஐஞ்சீர் அடி

**1320. வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்**
**ஐஞ்சீர் அடியும் உளவென மொழிப.**

### அறுசீர் அடி

**1321. அறுசீர் அடியே ஆசிரியத் தளையொடு**
**நெறிபெற்று வரூஉம் நேரடி முன்னே.**

### எழுசீர் அடி

**1322. எழுசீர் அடியே முடுகியல் நடக்கும்.**



அளவடி மிகுதியாகிய 13 எழுத்து முதலாக, 20 நெடிலடியும், கழிநெடிலடியும் ஆகிய எழுத்தின்காறும் வரும் அடி, கலிப்பாவிற்குரிய. 58

வெண்பாவுரிச்சீர் நிற்ப நிரைமுதல் வெண்சீர் வந்து நிரையாய்த் தளைத்தாலும் கலியடிக்கு நீக்கும் நிலை இல்லை. 59

பிறவாகிய விரவிய தளையும் நீக்கும் நிலை இல்லை. வெண்டளையும் ஆசிரியத்தளையும் விரவும். 60

இயற்சீர் வெண்தளையானாகிய வெண்பாவடி ஆசிரியப்பாவின்கண் நிற்றற்குரிய மரபால் நிற்கவும் பெறும். 61

இயற்சீர் வெண்டளை விரவியும், ஆசிரியத் தளைவிரவியும், ஐஞ்சீர் அடியும் ஆசிரியப் பாவின் கண் வரும் எனக் கூறுவர். 62

ஆசிரியப்பாவின்கண் அறுசீரடி, ஆசிரியத் தளையொடு பொருந்தி நடைபெற்று வரும் நேரடிக்கு முன்னாக. 63

எழுசீரால் வரும் முடுகியல் அடி என்க. 64

### முடுகியல்

1323. முடுகியல் வரையார் முதல் ஈரடிக்கும்.

### இதுவும் அது

1324. ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினும்
மூவகை அடியும் முன்னுதல் இலவே.

### ஆசிரியப்பாவில், அடி பற்றிய முடிபுகள்

1325. ஈற்றயல் அடியே ஆசிரிய மருங்கின்
தோற்றம் முச்சீர்த்தாகும் என்ப.

### இதுவும் அது

1326. இடையும் வரையார் தொடை உணர்வோரே.

### கலிப்பாவிற்குச் சிந்தடி

1327. முச்சீர் முரற்கையுள் நிறையவும் நிற்கும்.

### வஞ்சிப்பாவின் ஈற்றடி

1328. வஞ்சித்தூக்கே செந்தூக்கு இயற்றே.

### வெண்பாவின் ஈற்றடி

1329. வெண்பாட்டு ஈற்றடி முச்சீர்த்து ஆகும்.

### இதுவும் அது

1330. அசைச்சீர்த்தாகும் அவ்வயினான.



ஐஞ்சீரடிக்கும், அறுசீரடிக்கும் முடுகியல் நிலை நீக்கார். 65

முடுகியலாகி வரும் மூவகை அடியும், ஆசிரியப்பாவினும், வெண்பாவினும் நிற்றல் இல்லை. 66

ஆசிரியப்பாவின் ஈற்றயலடி தோன்றுமிடத்து முச்சீராகவும் வரலாம் என்று கூறுவர். 67

ஆசிரியப்பாவினுள் வரும் மூச்சீரடி இடையிலும் வருதலை நீக்கார் செய்யுளின் இலக்கணம் அறிந்தோர். 68

முச்சீர் அடிகள் கலிப்பாவுள் பலவாக நிற்கும். 69

வஞ்சிப்பாவின் இறுதி, ஆசிரியப்பாவின் இயல்பினது. ஈற்றயலடி முச்சீரானும் வரும். 70

வெண்பாவின் ஈற்றடி முச்சீரான் வரும். அகம்நக நட்பது நட்பு. 71

வெண்பாவின் ஈற்றுச் சீர் அசைச்சீரான் அமையும். காசு, பிறப்பு, நாள், மலர் என. 72

### அதன்கண் நேரசைச்சீர்

1331. நேர் ஈற்று இயற்சீர் நிரையும் நிரைபும்
சீர் ஏற்று இறூஉம் இயற்கைய என்ப.

### நிரையசைச்சீர்

1332. நிரை அவண் நிற்பின் நேரும் நேர்பும்
வரைவின்று என்ப வாய்மொழிப் புலவர்.

### கலிப்பாவின் ஈற்றடி

1333. எழுசீர் இறுதி ஆசிரியம் கலியே.

### இதுவும் அது

1334. வெண்பா இயலினும் பண்புற முடியும்.

### யாப்பு

1335. எழுத்து முதலா ஈண்டிய அடியில்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்.

### அதன் ஏழு பகுதிகள்

1336. பாட்டு, உரை, நூலே, வாய்மொழி, பிசியே,
அங்கதம், முது சொல்லொடு, அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பேர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்.



வெண்பாவின் இறுதிச்சீரின் அயல்சீர், நேர்ஈற்று
இயற்சீராயின் நிரையசையும், நிரைப அசையும் ஆக 73
அமைந்து முடியும் என்பர்.

வெண்பாவின் ஈற்று அயல்சீர் நிரை ஈற்று
இயற்சீராயின், நேர்அசையும், நேர்பு அசையும்
வருதலை நீக்கார் என்று கூறுவர் உண்மை 74
அறிந்தோர்.

கலிப்பாவின் இறுதி (மூன்றும் நான்கும்)
ஏழுசீர்களைக் கொண்ட ஆசிரிய அடிகளாகும். 75

கலிப்பாவின் இறுதி வெண்பாச் சுரிதகமாகிப் 76
பண்புற முடியும்.

எழுத்து முதலாக, அசை, சீர், அடி என ஈட்டப்பெற்ற,
தான் குறித்த பொருளை முற்றுப் பெற நிறுத்துதல்
யாப்பு என்று கூறுவர், யாப்பினைத் தெளிவாக 77
அறிந்தவர்.

பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம்,
முதுசொல் என்ற ஏழுவகை இலக்கிய வகைகளும்,
சேரசோழ பாண்டியர் என்ற மூவர் ஆளும்
எல்லையும், வடக்கு வேங்கடம் தெற்கு குமரி, கிழக்கு
மேற்குக் கடல்களாக உள்ள எல்லைக்கண் தமிழ்
நாட்டவர் வழங்கும் யாப்பின் வகைகள் என 78
அறிவுடையோர் கூறுவர்.

### மரபு–சொல் மரபு

1337. மரபே தானும்
நாற்சொல் இயலான் யாப்பு வழிப்பட்டன்று.

### தூக்கு – அகவலோசை

1338. அகவலென்பது ஆசிரியம்மே.

### வெண்பா

1339. அஃது ஆன்று என்ப வெண்பா யாப்பே.

### கலி

1340. துள்ளல் ஓசை கலியென மொழிப.

### வஞ்சி

1341. தூங்கல் ஓசை வஞ்சியாகும்.

### மருட்பாவிற்குரிய ஓசை முடிபு

1342. மருட்பா ஏனை இருசார் அல்லது
தான் இது என்னும் தனிநிலை இன்றே.



இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்ற நாற்சொற்களின் தன்மையுடன் யாப்பு வழி அமைவது மரபு. 79

அகவல் என்ற ஓசை ஆசிரியப்பாவிற்கு உரியது. 80

வெண்பாவிற்குரிய ஓசை அகவலோசை அன்று; செப்பலோசை என்பர். 81

கலிப்பாவிற்குத் துள்ளல் ஓசை என்று கூறுவர். 82

வஞ்சிப்பாவிற்குத் தூங்கல் ஓசை என்பர். 83

மருட்பாவிற்கு ஓசை இது என்னும் தன்மை இல்லை. ஆசிரியம், வெண்பாவிற்குரிய ஓசையே அதற்கு ஓசையாகும். 84

### இதுவும் அது

1343. அவ்வியல் அல்லது பாட்டாங்குக் கிளவார்.

### தூக்கின் இயல்பு

1344. தூக்கியல் வகையே ஆங்கென மொழிப.

### தொடை – அதன் வகை

1345. மோனை எதுகை முரணே இயைபு என
நால்நெறி மரபின தொடை வகை என்ப.

### இதுவும் அது

1346. அளபெடை தலைப்பெய ஐந்தும் ஆகும்.

### இதுவும் அது

347. பொழிப்பும் ஒரூஉம் செந்தொடை மரபும்
அமைத்தனர் தெரியின் அவையுமார் உளவே.

### இதுவும் அது

1348. நிரனிறுத்து அமைத்தலும், இரட்டையாப்பும்
மொழிந்தவற்றியலான் முற்றும் என்ப.

### மோனைத் தொடை

1349. அடிதொறும் தலை யெழுத்து ஒப்பது மோனை.

### எதுகைத் தொடை

1350. அஃதொழிந்து ஒன்றின் எதுகை ஆகும்.



மேற்சொல்லப்பெற்ற ஓசையான் அல்லது வேறு ஓசையான் பாட்டினைக் கூறார். 85

தூக்கியல் வகை மேற்கூறிய அகவல், செப்பல், துள்ளல், தூங்கல் என்ற நான்கு எனக் கூறுவர். 86

மோனை, எதுகை, முரண், இயைபு என்ற நான்கு வகையாகத் தொடையின் வகைகள் அமையும் என்று கூறுவர். 87

அளபெடைத் தொடையோடு சேர்த்துத் தொடை வகை ஐந்தும் ஆகும். 88

பொழிப்பு, ஒரூஉ, செந்தொடை என்ற மூன்றையும் ஆராய்ந்தால் அவையும் தொடையின் பாகுபாடாகும். 89

நிரலே நிறுத்தி அமைத்துக் கொள்ளலும், ஓரடி முழுவதும் ஒரு சொல்லே வருகின்ற இரட்டைத் தொடையும் தொடையோடு இணைக்கலாம் என்பர். 90

பாட்டில் ஒவ்வொரு அடியிலும் முதல் எழுத்து ஒத்துவருவது மோனைத் தொடை. 91

அடிதொறும் இரண்டாவது எழுத்து ஒரேபோன்று வருவது எதுகைத் தொடை. 92

அவற்றிற்குக் கிளைஎழுத்தும் பொருந்தும்

1351. ஆயிருதொடைக்கும் கிளை எழுத்து உரிய.

முரண் தொடை

1352. மொழியினும் பொருளினும் முரணுதல் முரனே.

இயைபுத் தொடை

1353. இறுவாய் ஒன்றல் இயைபின் யாப்பே.

அளபெடைத் தொடை

1354. அளபெழின் அவையே அளபெடைத் தொடையே.

பொழிப்புத் தொடை

1355. ஒரு சீர் இடையிட்டு எதுகை ஆயின்
பொழிப்பென மொழிதல் புலவர் ஆறே.

ஒரூஉத் தொடை

1356. இருசீர் இடை இடின் ஒரூஉ என மொழிப.

செந்தொடை

1357. சொல்லிய தொடையொடு வேறுபட்டு இயலின்
சொல்லியல் புலவர் அது செந்தொடை என்ப.

தொடைகளின் விரி

1358. மெய்பெறு மரபின் தொடை வகை தாமே
ஐ ஈர் ஆயிரத்து ஆறு ஐஞ் ஞூற்றொடு
தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூற்று
ஒன்பஃது என்ப உணர்ந்திசினோரே.



மோனை, எதுகைத் தொடைகளுக்கு, ஒத்த எழுத்தன்றி, கிளை எழுத்துக்களும் உரியன. 93

அடிதொறும், சொல்லாலும், பொருளாலும் மாறுபடத் தொடுப்பது முரண் தொடையாம். 94

அடிதொறும் இறுதி எழுத்து ஒன்றி வரின் அது இயைபுத் தொடையாம். 95

அடிதொறும் அளபெடை வரத் தொடுப்பின் அது அளபெடைத் தொடை ஆகும். 96

ஒரு சீர் இடையிட்டு இரண்டாம் எழுத்துப் பொருந்தி வந்தால் அது பொழிப்புத் தொடை எனக் கூறுவது அறிவுடையோர் வழியாகும். 97

இருசீர் இடையிட்டு எழுத்துக்கள் ஒன்றிவரின் அது ஒரூஉத் தொடை என்று கூறுவர். 98

மேற்கூறப் பெற்ற தொடைகளோடு வேறுபட்டு வந்தால் அது செந்தொடை எனச் சொல்லியல் அறிந்த அறிவுடையோர் கூறுவர். 99

உருவம் பெற்று வரும் மரபில் தொடை வகை 13699 என்று கூறுவர் தொடை இலக்கணம் உணர்ந்தோர். மோனை - 1019; எதுகை - 2473; முரண் - 2; இயைபு - 182; அளபெடை - 159; பொழிப்பு - 654; ஒரூஉ - 654; செந்தொடை - 8556: ஆகத் தொடை 13699. 100

புறனடை

1359. தெரிந்தனர் விரிப்பின் வரம்பில பல்கும்.

இதுவும் அது

1360. தொடை வகை நிலையே ஆங்கென மொழிப.

நோக்கு

1361. மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப்படுமே.

பா – அதன் வகை

1362. ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி என
நால் இயற்று என்ப பாவகை விரியே.

அதன்கண் உரைக்கப்படும் பொருள்

1363. அந்நிலை மருங்கின் அற முதலாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப.

நால்வகை, இருவகையில் அடங்கல்

1364. பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின்
ஆசிரியப்பா வெண்பா என்றாங்கு
ஆயிரு பாவினுள் அடங்கும் என்ப.

அவை அடங்கும் வகை

1365. ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை
வெண்பா நடைத்தே கலி என மொழிப.

தொடை இலக்கணம் அறிந்தோர் விரித்துக் கூறினால், மிகப் பெருகி அமையும். 101

தொடை வகைகள் மேற் சொல்லப் பெற்ற பாகுபாட்டினையுடைய என்று கூறுவர். 102

மாத்திரை முதல் அடிவரை கூறப்பெறும் உறுப்புக்கள் அனைத்தையும் தொடையுட்பட முழுநிலையில் பார்ப்பது நோக்கு எனக்கூறப் பெறும். 103

ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா எனப் பாக்கள் நாலு வகையில் இயற்றப் பெறும் என்று கூறுவர். 104

அந்நான்கு வகைப் பாக்களும், அறம், பொருள், இன்பம் என்ற முப்பொருள்களைப் பற்றி இயற்றுதற்கு உரிய என்று கூறுவர். 105

மேற்கூறிய ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலிப்பா என்ற நான்கும், ஆசிரியப்பா, வெண்பா ஆகிய இருபாவகைகளுள் அடங்கும் என்று கூறுவர். 106

ஆசிரியம் போன்ற நடையை உடையது வஞ்சிப்பா; வெண்பா போன்ற நடையை உடையது கலிப்பா என்று கூறுவர். 107

### வாழ்த்துக்கு நான்கு பாக்களும் உரியன

1366. வாழ்த்தியல்வகை நாற்பாவிற்கும் உரித்தே.

### புறநிலை வாழ்த்து

1367. வழிபடுதெய்வம் நின்புறம் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ.

### வாயுறை வாழ்த்து முதலியன

1368. வாயுறை வாழ்த்தே, அவையடக் கியலே,
செவியறிவுறூஉ என அவையும் அன்ன.

### அவற்றுள் வாயுறை வாழ்த்து

1369. வாயுறை வாழ்த்தே, வயங்க நாடின்
வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குதல் இன்றி வழிநனி பயக்கும் என்று
ஓம்படைக் கிளவியின் வாயுறுத்தற்றே.

### அவையடக்கியல்

1370. அவையடக்கியலே, அரில்தபத் தெரியின்
வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மின் என்று
எல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே.



நான்கு பாக்களாலும் வாழ்த்துப் பாடல்கள் பாடலாம். 108

வழிபடுதெய்வம் உன்னைப் பாதுகாக்கட்டும், குற்றம் தீர்ந்த செல்வமொடு, வழி வழியாகச் சிறந்து வாழ்க என்ற பொருளில் அமையும் புறநிலை வாழ்த்து, கலிப்பாவாலும், வஞ்சிப் பாவாலும் வராது. ஏனைய ஆசிரியம், வெண்பாவால் வரும் என்பது பெற்றாம். 109

வாயுறை வாழ்த்து, அவையடக்கியல், செவியறிவுறுத்தற் பொருளில் வரும் இம் மூன்றும், கலி, வஞ்சியில் வரா. 110

வாயுறை வாழ்த்தை, விளக்கமாக ஆராய்ந்தால், வேம்பு கடுக்காய் போன்ற வெம்மைச் சொற்கள் இருந்தாலும், வழிவழியாக நன்மை பயக்கும் எனக்கருதி, அச்சொற்களைத் தவிர்க்காமல், பாதுகாத்தலையுடைய சொற்களால், மெய்ப்பொருளை உணர்த்தலாம். 111

அவையடக்கியலாவது, குற்றமறஆராயின், வலிமை இல்லாதவற்றைக் கூறினாலும், அதை வகுத்துக் கொண்டு கொள்க என்று யாவர்க்கும் பணிவாகக் கூறுதலாம். 112

### செவியுறை

1371. செவியுறை தானே
பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடன் எனச் செவியுறுத் தன்றே.

### பாக்களில் சிலவற்றின் இயல்பு

1372. ஒத்தாழிசையும், மண்டில யாப்பும்,
குட்டமும் நேரடிக்கு ஒட்டின என்ப.

### இதுவும் அது

1373. குட்டம் எருத்தடி உடைத்துமாகும்.

### இதுவும் அது

1374. மண்டிலம், குட்டம் என்றிவை இரண்டும்
செந்தூக்கு இயல என்மனார் புலவர்.

### வெண்பாவின் வகைகள்

1375. நெடுவெண் பாட்டே, குறுவெண் பாட்டே,
கைக்கிளை பரிபாட்டு அங்கதச் செய்யுளோடு
ஒத்தவை எல்லாம் வெண்பா யாப்பின.

### அவற்றுள் கைக்கிளைப் பாட்டு

1376. கைக்கிளை தானே வெண்பாவாகி
ஆசிரிய இயலான் முடியவும் பெறுமே.



கேட்போன் உளம் கொள்ளுமாறு சொல்லுதல் செவியுறை; சினத்தலும், தன்னை வியக்கும் செருக்குமின்றி, பெரியோர் நடுவில் தாழ்ந்து ஒழுகுதல் கடமை எனச் சொல்லல். 113

ஒத்து மூன்றடுக்கி வரும் ஒத்தாழிசையும், எல்லா அடிகளும், ஓசையாலும் சீராலும் வரும் மண்டில யாப்பும், குறைந்து வரும் குட்டமும் நாற்சீரடிக்குப் பொருந்தின என்று கூறுவர். 114

தரவு என்னும் கலிப்பாவின் முதலுறுப்பு, ஈற்றயலடி முச்சீரான் வரவும் பெறும். 115

மண்டிலமும், குட்டமும் ஆசிரிய ஓசையாகிய அகவலோசையைப் போன்றது என்று கூறுவர் அறிவுடையோர். 116

ஐந்தடி முதல் ஏழடிவரை வரும் நெடுவெண்பாவும், எழுசீர்கள் கொண்டு இரண்டடியான் வரும் குறள் வெண்பாவும், கைக்கிளை, பரிபாடல், அங்கதச் செய்யுளும், இவற்றொடு ஒத்தவை எல்லாம் வெண்பா யாப்பை யுடையன. 117

கைக்கிளைப் பொருண்மையுடைய பாடல்கள், வெண்பாவால் வருதலன்றி, வெண்பாயாப்பில் தொடங்கி, ஆசிரியப்பாவில் முடியலாம். 118

## பரிபாட்டு

1377. பரிபாடல்லே தொகைநிலை வகையின்
இது பா என்னும் இயல்நெறி இன்றிப்
பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப.

## பரிபாடலின் உறுப்புக்கள்

1378. கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்தொடு
செப்பிய நான்கும் தனக்கு உறுப்பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும்.

## அதன்கண் பயிலும் அடிகள்

1379. சொற்சீர் அடியும், முடுகியல் அடியும்,
அப்பா நிலைமைக்கு உரியவாகும்.

## அவற்றுள் சொற்சீரடி

1380. கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்தும்,
முட்டு அடி இன்றிக் குறைவு சீர்த்தாகியும்,
ஒழியசை ஆகியும், வழியசை புணர்ந்தும்,
சொற்சீர்த்து இறுதல் சொற்சீர்க்கு இயல்பே.

## அங்கதப் பாட்டு

1381. அங்கதம் தானே அரில்தபத் தெரியின்
செம்பொருள், கரந்தது என இரு வகைத்தே.



பரிபாடல் என்பது தொகுத்துக் காணும் வகையில், இன்ன பா என்று சொல்லப்படும் இலக்கமின்றி, எல்லாப் பாவிற்கும் பொதுவாய் நிற்றற்கும் உரியது என்று கூறுவர். 119

பரிபாடல், கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்தென்ற தரவுடன், கூறப் பெற்ற நான்கினையும், தனக்கு உறுப்பாகக் கொண்டு அகத்திணைப் பொருளில் வரும். 120

பரிபாடலில் சொற்சீர் அடியும், முடுகியல் அடியும் வருதற்கு உரியனவாகும். 121

பாட்டு யாப்பின்றிக் கட்டுரையின் கூறாகிய எண்ணொடு புணர்ந்தும், முற்றிய அடியின்றி, குறைந்த சீர்களைக் கொண்டும், இயலசையாய், உரியசையனவாய் நின்றும், முச்சீரடியானும் இருசீரடியானும் குறைந்த சீர்களுடன் முடிதல் சொற்சீர்க்கு இயல்பு. 122

அங்கதச் செய்யுளின் இலக்கணத்தைக் குற்றமற ஆராய்ந்தால், செம்பொருள் அங்கதம் என்றும், பழி கரப்பு அங்கதம் என்றும் இருவகைப்படும். 123

### செம்பொருள் அங்கதம்

1382. செம் பொருளாயின் வசை எனப்படுமே.

### பழிகரப்பு அங்கதம்

1383. மொழி கரந்து சொல்லின் அது பழிகரப்பாகும்.

### செய்யுள் வகை

1384. செய்யுள் தாமே இரண்டு என மொழிப.

### செவியுறைச் செய்யுள்

1385. புகழொடும் பொருளொடும் புணர்ந்தன்றாயின்
செவியுறைச் செய்யுள் அது என மொழிப.

### அங்கதச் செய்யுள்

1386. வசையொடும் நசையொடும் புணர்ந்தன்றாயின்
அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்.

### கலிப்பாவின் வகை

1387. ஒத்தாழிசைக் கலி, கலிவெண் பாட்டே,
கொச்சகம், உறழொடு கலி நால் வகைத்தே.

### ஒத்தாழிசைக் கலி

1388. அவற்றுள்
ஒத்தாழிசைக்கலி இருவகைத்தாகும்.



செம்பொருள் அங்கதம் வசை எனப் பெயர் பெறும். 124

வசையினை வெளிப்படமொழியாமல், சொற்களுள் மறைத்து வைத்து மொழிதல் பழிகரப்பாகும். 125

செய்யுள் பொருள் உணர்த்தும் முறையால் இரண்டு வகைப்படும் என்று கூறுவர். 126

பரவதலும், புகழ்தலும் இணைந்தும், முப்பொருள் கருடனும் பொருந்தியும் வரும் செய்யுட்கள், செவியுறைச் செய்யுள் என்று கூறுவர். 127

வசையொடும், தன்னை விருப்பொடும் பொருந்தி வரும் செய்யுட்கள் அங்கதச் செய்யுள் என்று கூறுவர் அறிவுடையோர். 128

பொருளாலும், உறுப்பாலும், முடிபாலும் வேறுபட்டு அமையும் கலிப்பாக்கள், ஒத்தாழிசைக் கலி, கலிவெண்பாட்டு, கொச்சகக்கலி, உறழ்கலி என நான்கு வகைப்படும். 129

அவற்றுள் ஒத்தாழிசைக் கலி இரண்டு வகைப்படும். 130

[illegible].35.

### இதுவும் அது

1389. இடைநிலைப் பாட்டு, தரவு, போக்கு, அடைஎன
நடைபயின்றொழுகும் ஒன்றென மொழிப.

### தரவு

1390. தரவே தானும் நாலடி இழிபாய்
ஆறிரண்டு உயர்பு ஏறவும் பெறுமே.

### இடைநிலைப் பாட்டு

1391. இடைநிலைப் பாட்டே,
தரவு அகப்பட்ட மரபின என்ப.

### அடைநிலைக்கிளவி என்ற தனிச்சொல்

1392. அடைநிலைக் கிளவி, தாழிசைப் பின்னர்
நடைநவின்றொழுகும் ஆங்கென மொழிப.

### போக்கியல் என்னும் சுரிதகம்

1393. போக்கியல் வகையே வைப்பு எனப்படுமே.

### இதுவும் அது

1394. தரவியல் ஒத்தும், அதனகப்படுமே
புரைதீர் இறுதி நிலையுரைத் தன்றே.

### இருவகை ஒத்தாழிசைக் கலியுள் மற்றொன்று

1395. ஏனை ஒன்றே
தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே.



இடைநிலைப் பாட்டு என்ற தாழிசைப் பாடல்களும், தரவு, போக்கு என்ற சுரிதகமும், அடை என்ற தனிச் சொல்லும் எனும் உறுப்புக்களைக் கொண்டு வரும் ஒத்தாழிசைக் கலி, என்பர். 131

தரவு, நான்காடியாகக் குறைந்த நிலையிலும், பன்னிரண்டு அடி மிகுந்த நிலையிலும் வரும். 132

தாழிசைப் பாடல்கள், தரவுக்குக் குறைந்த அடிகளான் வரும் மரபினை யுடையன என்று கூறுவர். 133

அடைநிலைக் கிளவியாகிய தனிச் சொல் தாழிசைப் பின்னர் நடத்தலைப் பயின்று ஒழுகும் என்று கூறுவர். 134

போக்கியல் என்னும் சுரிதகம், வைப்பு என்றும் கூறப்பெறும். 135

தரவுடன் ஒத்த அளவாகவும், அதற்குக் குறைந்தும் வரும். குற்றம் தீர்ந்த பாட்டின் இறுதிநிலையை உரைத்தது. 136

ஒத்தாழிசைக் கலியில் பிறிதொன்று, முன்னிலைக் கண் தேவரைப் புகழ்ந்து பாடுதலின்கண் வரும். 137

### அம் மற்றொன்றின் வகை

1396. அதுவே
வண்ணகம், ஒருபோகு என இரு வகைத்தே.

### வண்ணக ஒத்தாழிசை

1397. வண்ணகந் தானே,
தரவே, தாழிசை, எண்ணே, வாரம் என்று
அந்நால் வகையின் தோன்றும் என்ப.

### அதன் உறுப்புக்களுள் தரவு

1398. தரவே தானும்
நான்கும் ஆறும் எட்டும் என்ற
நேரடி பற்றிய நிலைமைத் தாகும்.

### தாழிசை

1399. ஒத்து மூன்றாகும் ஒத்தாழிசையே.

### இதுவும் அது

1400. தரவின் சுருங்கித் தோன்றும் என்ப.

### சுரிதகம்

1401. அடக்கியல் வாரம் தரவோடு ஒக்கும்.

### எண்

1402. முதல் தொடை பெருகிச் சுருங்குமன் எண்ணே.



தேவரைப் பரவதலாக வரும் ஒத்தாழிசைக் கலிப்பா வண்ணகம், ஒருபோகு என இருவகைப்படும். 138

வண்ணக ஒத்தாழிசை, தரவு, தாழிசை, எண், வாரம் ஆகிய நான்கு வகை உறுப்புக்களுடன் வரும் என்பர். 139

வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குத் தரவு, நான்கு, ஆறு, எட்டு, ஆகிய அடிகளால் வரும் நிலைமைத்து. 140

தாழிசை ஓசையானும், பொருளானும், அளவானும் ஒத்து மூன்றடுக்கி வரும். 141

தரவு அடிகளைக் காட்டிலும், தாழிசை அடிகள் சுருங்கி வரும் என்று கூறுவர். 142

அடிக்கியலாகிய வாரம் என்னும் இறுதி உறுப்பு, தரவை ஒத்து வரும். 143

எண் என்ற அம்போதரங்க உறுப்பு, முதலில் தொடுப்பது பெருகியும், பின்பு சுருங்கியும் வரும். 144

### அதற்கு ஒரு முடிபு

1403. எண் இடை ஒழிதல் ஏதம் இன்றே
சின்னம் அல்லாக் காலை யான.

### ஒருபோகு கலிப்பாவின் வகை

1404. ஒருபோகு இயற்கையும் இருவகைத் தாகும்.

### அவற்றின் பெயர்

1405. கொச்சக ஒருபோகு, அம்போதரங்கம் என்று
ஒப்ப நாடி உணர்தல் வேண்டும்.

### கொச்சக ஒருபோகு

1406. தரவு இன்றாகித் தாழிசை பெற்றும்,
தாழிசை இன்றித் தரவுடைத் தாகியும்,
எண் இடைஇட்டுச் சின்னங் குன்றியும்,
அடக்கியல் இன்றி அடிநிமிர்ந்து ஒழுகியும்,
யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடையது
கொச்சக ஒருபோகு ஆகும் என்ப.

### அதன் அடி வரையறை

1407. ஒருபான் சிறுமை இரட்டி அதன் உயர்பே.

### அம்போதரங்க ஒருபோகின் அடி வரையறை

1408. அம்போதரங்கம் அறுபதிற்றடித்தே;
செம்பால் வாரம் சிறுமைக்கு எல்லை.



எண் என்ற உறுப்பு இடையில் வராதிருத்தல் குற்றம் இல்லை. சின்னமாகித் தனிச்சொல் வராத இடத்து. 145

ஒருபோகு என்ற கலிப்பாவும் இருவகைப்படும். 146

கொச்சக ஒருபோகு, அம்போதரங்க ஒருபோகு என்று இரண்டு. அவற்றிற்குரிய இலக்கணத்தை ஒப்ப ஆராய்ந்து உணர்தல் வேண்டும். 147

தரவு இல்லாமல், தாழிசை பெற்றும், தாழிசை இல்லாமல் தரவைப் பெற்றும், அம்போதரங்க உறுப்பின்றியும், தனிச் சொல் இன்றியும், சுரிதக உறுப்பு இல்லாமல், நாற்சீரடியின் மிக்கு ஐஞ்சீரடி முதலாக ஓங்கிய நடைபெற்றும், யாப்பியல்பானும், பொருளமைதியானும் வேறுபட்டு வருவது கொச்சக ஒருபோகு என்று கூறுவர். 148

கொச்சக ஒருபோகுச் செய்யுளின் குறைந்த அளவு பத்தடி; மிகுதி அளவு இருபது அடி. 149

அம்போதரங்க ஒருபோகுச் செய்யுட்குப் பெருமை அறுபதடி; அதில் பாதி 30 அடியாக வருதல் சிறுமைக்கு வரையறை. 150

## அதன் உறுப்புக்கள்

1409. எருத்தே, கொச்சகம், அராகம், சிற்றெண்,
அடக்கியல், வாரமொடு அந்நிலைக்கு உரித்தே.

## கலிவெண்பா

1410. ஒருபொருள் நுதலிய வெள்ளடி இயலால்
திரிபின்றி வருவது கலிவெண் பாட்டே.

## கொச்சகக் கலி

1411. தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்தும்,
ஐஞ்சீர் அடுக்கியும் ஆறுமெய் பெற்றும்,
வெண்பா இயலான் வெளிப்படத் தோன்றும்
பாநிலை வகையே கொச்சகக்கலி என
நூல் நவில் புலவர் நுவன்று அறைந்தனரே.

## உறழ்கலி

1412. கூற்றும் மாற்றமும் இடைஇடை மிடைந்தும்
போக்கின்றாகல் உறழ்கலிக்கு இயல்பே.

## அளவியல் – ஆசிரியப்பாவின் அடியளவு

1413. ஆசிரியப் பாட்டின் அளவிற்கு எல்லை
ஆயிரம் ஆகும்; இழிபு மூன்றடியே.

## வெண்பாவின் அடி அளவு

1414. நெடுவெண் பாட்டே முந்நால் அடித்தே;
குறுவெண் பாட்டின் அளவு எழுசீரே.



எருத்தாகிய தரவு, கொச்சகம், அராகம், சிற்றெண்ணாகிய இரு சீரடி அம்போதரங்கம், சுரிதகம், வாரம், ஆகிய உறுப்புக்களுடன் வரும். 151

ஒரு பொருள் கருதிய இயல்பினால், வெண்பா அடியினது இலக்கணத்தான், திரிபின்றி முடிவது கலிவெண்பாட்டாகும். 152

தரவு, சுரிதகம், தாழிசையும் இடைமிடைந்தும், ஐஞ்சீரடி பலவந்தும், தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்ற ஆறு உறுப்புப் பெற்றும், வெண்பா இயல்பில் வெளிப்படத் தோன்றி அமைவது கொச்சகக்கலி என்று பாவின் இலக்கணம் உணர்ந்த புலவர் தெளிவுபடக் கூறினர். 153

ஒருவர் ஒன்றைக் கூறுதலும், அதற்கு மற்றவர் பதில் கூறுதலும் ஆக இடைமிடைந்து, சுரிதகம் இன்றி வருதல் உறழ்கலிக்கு இயல்பு. 154

ஆசிரியப்பா மிகுதியாக ஆயிரம் அடிகளைக் கொண்டுவரும்; குறைந்தது மூன்று அடியிலும் வரும். 155

வெண்பா, பன்னிரண்டு அடிகள் பெருமை; சிற்றளவு எழுசீர், குறள்வெண்பா போன்று. 156

### அங்கதப்பாட்டின் அடியளவு
1415. அங்கதப் பாட்டு அவற்றளவோடு ஒக்கும்.

### அளவு வரையறை இல்லாதன
1416. கலிவெண் பாட்டே, கைக்கிளைச் செய்யுள்,
புறநிலை, வாயுறை, செவியறிவு என்றிவை
தொகுநிலை மரபின் அடியில என்ப.

### புறநிலை வாழ்த்து முதலியவற்றிற்கு முடிபு
1417. புறநிலை, வாயுறை, செவியறிவுறூஉ எனத்
திறநிலை மூன்றும் திண்ணிதின் தெரியின்
வெண்பா இயலினும் ஆசிரிய இயலினும்
பண்புற முடியும் பாவின என்ப.

### பரிபாடலின் அளவு
1418. பரிபாட்டெல்லை
நாலீர் ஐம்பது உயர்புஅடியாக
ஐ ஐந்து ஆகும் இழிபு அடிக்கு எல்லை.

### இதுவும் அது
1419. அளவியல் வகையே அனைவகைப்படுமே.

### அடி வரையறை இல்லாதன
1420. எழுநிலத் தெழுந்த செய்யுள் தெரியின்
அடிவரை இல்லன ஆறுஎன மொழிப.



அங்கதப்பாட்டிற்கும் பேரெல்லை பன்னிரண்டு அடி; சிற்றெல்லை எழுசீர்; இரண்டடி. 157

வெண்பாவின் இயலான் வரும் கலிவெண்பாட்டு, கைக்கிளைச் செய்யுள், புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, போன்றவை அடிவரையறை இல்லாதன என்று கூறுவர். 158

புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ என்ற மூன்று வகை வாழ்த்தியல் பாக்களும் தெளிவாகத் தெரிந்தால் வெண்பா இலக்கணத்தானும், ஆசிரிய இலக்கணத்தானும் பண்புற முடியும் பாவின என்று கூறுவர். 159

பரிபாடல் 4 × 2 × 50 = ஆக 400 அடி பேரெல்லையாகவும், 5 × 5 = ஆக 25 அடி சிற்றெல்லையாகவும், வரும். 160

செய்யுள் உறுப்புக்களுள் ஒன்றாகிய அளவியல் என்ற அமைப்பு மேற்கூறியவாறு அமையும். 161

பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்று எழுநிலத்து எழும் இலக்கிய வகை தெரிந்தால் பாட்டுத் தவிர ஏனைய ஆறும் அடிவரையறை இல்லாதன என்று கூறுவர். 162

### அவற்றின் வகை

1421. அவை தாம்
நூலினான, உரையினான,
நொடியொடு புணர்ந்த பிசியினான,
ஏது நுதலிய முதுமொழியான,
மறைமொழி கிளந்த மந்திரத்தான,
கூற்றிடை வைத்த குறிப்பினான.

### அவற்றுள் நூல்

1422. அவற்றுள்
நூல் எனப்படுவது நுவலுங்காலை,
முதலும் முடிவும் மாறுகோள் இன்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உள் நின்று அகன்ற உரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே.

### அதன் வகை

1423. அதுவே தானும் ஈர் இரு வகைத்தே.

### அவற்றின் பெயரும் இயல்பும்

1424. ஒரு பொருள் நுதலிய சூத்திரத் தானும்,
இனமொழி கிளந்த ஓத்தினானும்,
பொதுமொழி கிளந்த படலத்தானும்,
மூன்று உறுப்பு அடக்கிய பிண்டத்தானும் என்று
ஆங்கு அனைமரபின் இயலும் என்ப.



மேலே கூறப்பெற்ற அடிவரையறை இல்லாதன ஆறும் 1. நூலின் கண் வருவனவும் 2. உரையாய் வருவனவும் 3. விடுகதையொடு பொருந்திய பிசியாய் வருவனவும் 4. காரணம் கருதி வரும் பழமொழியாய் வருவனவும் 5. மறைந்த மொழிகளால் வரும் மந்திரத்தில் வருவனவும் 6. மேற்கோளிடை வைத்த குறிப்பின் கண் வருவனவும் ஆகும். 163

நூல் என்று கூறப்பெறுவது, தொடக்கமும் முடிவும் பொருள் முரண் இன்றி, தொகையிலும், வகையிலும் பொருண்மை புலப்படக் காட்டி, ஆழ்ந்து, அகன்ற விளக்கத்தொடு பொருந்தி, நுட்பமாகப் பொருளை விளக்குதல் - அது அதன் பண்பாகும். 164

நூல் தான் 2 × 2 = ஆக 4 வகைத்தாகும். 165

ஒரு பொருளைப் பற்றிக் கூறும் சூத்திரங்களான் வருவனவும், ஓரினமாகிய பொருளை வகுத்துணர்த்தும் ஓத்துக்களால் வருவனவும், பலபொருள்களை விரித்து உணர்த்தும் படலங்களால் வருவனவும், இம்மூன்று உறுப்புக்களையும் அடக்கி வரும் பிண்டத்தால் வருவனவும் என்று நால்வகை மரபின என்று கூறுவர். 166

அவற்றுள், சூத்திரம்

1425. அவற்றுள்,
சூத்திரந் தானே,
ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க
யாப்பினுள் தோன்ற யாத்து அமைப்பதுவே.

ஒத்து

1426. நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு
ஓரினப் பொருளை ஒருவழி வைப்பது
ஓத்து என மொழிப உயர்மொழிப் புலவர்.

படலம்

1427. ஒரு நெறி இன்றி விரவிய பொருளால்
பொது மொழி தொடரின் அது படலமாகும்.

பிண்டம்

1428. மூன்று உறுப்பு அடக்கிய தன்மைத்தாயின்
தோன்று மொழிப் புலவர் அது பிண்டம் என்ப.

உரையின் வகை

1429. பாட்டிடை வைத்த குறிப்பினானும்,
பாவின்று எழுந்த கிளவியானும்,
பொருளொடு புணராப் பொய்ம்மொழியானும்,
பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்,
உரை வகை நடையே நான்கு என மொழிப.





சூத்திரம் என்பது, கண்ணாடிக்குள் அதன் நிழலில் ஒரு பெருமலையே தோன்றுவது போல, ஐயுற்று ஆராய்தல் இன்றி, கூறப்பெற்றுள்ள பொருள் தெளிவாக விளங்குமாறு அமையும் யாப்பினுள் ஏதாவது ஒன்றின் வடிவமைத்து அமைப்பதாகும். 167

ஓரினமாகிய மணிகளுள் தரத்தால் ஒத்த மணிகளை வரிசை பெறக் கோத்தல் போல ஓரினப் பொருள்களைத் தொகுத்து ஒரு முறையில் வைப்பது ஓத்து என்று கூறுவர் சிறந்த புலவர். 168

ஒரு பொருள் என்ற முறைமையின்றி, விரவிய பலபொருள்களால் பொதுப் பொருள் தோன்ற அமைப்பின் அது படலமாகும். 169

சூத்திரம், ஓத்து, படலம் என்ற மூன்று உறுப்புக்களையும் கொண்டு வரும் நூலாயின் அதைப் பிண்டம் என்று கூறுவர் தலையாய தமிழ்ப் புலவர். 170

உரை வகை நான்கு. 1. பாட்டினிடையே வரும் பொருட்குறிப்புகள் 2. பாவாக நடைபெறாமல் செய்யுள் தொடர்களான் வருவனவும் 3. பூப் போன்ற பொருள் கனவு காண்பதாகக் கூறுவது போன்ற பொய்ம்மொழியானும் 4. பொருளொடு பொருந்திய நகைமொழியானும் ஆகிய நான்கு நிலைகளில் வரும் உரை வகை என்ற கூறுவர். 171

உரை - இரண்டு வகை

1430. அதுவே தானும் இருவகைத் தாகும்.

அவற்றின் இயல்பு

1431. ஒன்றே மற்றும் செவிலிக்கு உரித்தே
ஒன்றே யார்க்கும் வரை நிலை இன்றே.

பிசி

1432. ஒப்பொடு புணர்ந்த உவமத் தானும்
தோன்றுவது கிளந்த துணிவி னானும்
என்று இருவகைத்தே பிசிவகை நிலையே.

முதுமொழி

1433. நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்
மென்மையும் என்று இவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப.

மந்திரம்

1434. நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப.

குறிப்பு மொழி

1435. எழுத்தொடும் சொல்லொடும் புணராதாகிப்
பொருள் புறத்ததுவே குறிப்பு மொழி என்ப.



மைந்தர்க்கு உரைப்பனவும், மகளிர்க்கு உரைப்பனவும் என்று உரை இருவகைப்படும். 172

மகளிர்க்கு உரைக்கும் உரை செவிலிக்கு உரித்து; மைந்தர்க்கு உரைக்கும் உரை எல்லார்க்கும் உரித்து. 173

பிறைகவ்வி மலை நடக்கும் - யானை, ஒப்பொடு புணர்ந்த உவமை; சிறகு முளைத்தால் கூட்டில் இருக்காது, தோன்றுவது கிளந்த துணிவு; இவ்வாறு இருவகைப்படும் பிசியின் நிலை. 174

நுண்மை விளங்கவும், சுருக்கம் விளங்கவும், ஒளியுடைமை விளங்கவும், மென்மை விளங்கவும், இன்னோரன்ன விளங்கித் தோன்றிக் கருதிய பொருளைக் காரணத்தொடு முடித்துக் கூறுதல் முதுமொழி என்று கூறுவர். அது முதுரை, பழமொழி போன்றவை. 175

நிறைந்த மொழியை உடைய மாந்தர் தமது ஆணையால் சொல்லப்பெற்ற மறைந்த சொல் மந்திரம் என்று கூறுவர். 176

எழுத்தொடும், சொல்லொடும் பொருந்தி, வெளிப்படையாகத் தோன்றாது, சொன்ன தொடரின் பொருள் வெளியில் உள்ளது குறிப்பு மொழி என்று கூறுவர். 177

## பண்ணத்தி

1436. பாட்டிடைக் கலந்த பொருளவாகிப்
பாட்டின் இயல பண்ணத்தி இயல்பே.

## இதுவும் அது

1437. அதுவே தானும் பிசியொடு மானும்.

## அதற்கு அடி அளவு

1438. அடிநிமிர் கிளவி ஈராறு ஆகும்.

## இதுவும் அது

1439. அடி இகந்து வரினும் கடிவரை இன்றே.

## அளவியல் முடிபு

1440. கிளரிய வகையில் கிளந்தன தெரியின்
அளவியல் வகையே அனை வகைப்படுமே.

## திணை

1441. கைக்கிளை முதலா எழுபெருந்திணையும்
முற்கிளந்தனவே முறைநெறி வகையின.

## கைகோள் – களவு

1442. காமப் புணர்ச்சியும், இடந்தலைப் படலும்,
பாங்கொடு தழாலும், தோழியிற் புணர்வும் என்று
ஆங்க நால் வகையினும் அடைந்த சார்பொடு
மறையென மொழிதல் மறையோர் ஆறே.



பாட்டிடைக் கலந்த பொருளை யுடையனவாய், சிற்றிசையும், பேரிசையும் ஆகி இசைத் தமிழில் கூறப் பெறுவன பண்ணத்தியின் இயல்பு. 178

அது பிசிபோன்று விடுகதையாகப் பொருந்தி வரும். 179

பண்ணத்தி 2 × 6 = ஆகப் பன்னிரண்டு அடிகளை யுடையதாக வரும். 180

அதை விட மிக்க அடிகளைப் பெற்று வந்தாலும் தவறில்லை. 181

கூறப்பெற்ற வகையில், சொல்லப் பெற்றன தெரியின் அளவியல் வகை மேற் கூறிய நிலைகளில் அமையும். 182

திணை என்பது கைக்கிளை, முதலாக முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை ஈறாக முன்பு கூறிய ஏழுவகைத் திணையாகிய நெறிமுறையை யுடையன. 183

இயற்கைப் புணர்ச்சியும், இடந்தலைப் படலும், பாங்கற் கூட்டமும், தோழியிற் கூட்டமும் என்று சொல்லப்பெற்ற நான்கு வகையாலும், அவற்றைச் சார்ந்து வருபவையும், களவு என மொழிதல், களவிலக்கணம் கூறும் புலவர் நெறியாகும். 184

## கற்பு

1443. மறை வெளிப்படுதலும், தமரின் பெறுதலும்,
இவை முதலாகிய இயல் நெறி திரியாது
மலிவும், புலவியும், ஊடலும், உணர்வும்,
பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே.

## கைகோள் முடிபு

1444. மெய்பெறும் அவையே கைகோள் வகையே.

## கூற்று – களவில் கூற்று நிகழ்த்துவோர்

1445. பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி,
சீர்த்தகு சிறப்பின் கிழவன், கிழத்தியோடு,
அளவியல் மரபின் அறுவகை யோரும்
களவினில் கிளவிக்கு உரியர் என்ப.

## கற்பில் கூற்று நிகழ்த்துவோர்

1446. பாணன், கூத்தன், விறலி, பரத்தை,
யாணம் சான்ற அறிவர், கண்டோர்,
பேணுதகு சிறப்பின் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்
தொல்நெறி மரபின் கற்பிற்குரியர்.



களவொழுக்கம் வெளிப்படுதலும், களவொழுக்க மின்றித் தமரானே பெறுதலும், இவை முதலாக முறைமையில் திரியாது, மகிழ்தலும், புலத்தலும், ஊடலும், ஊடல் தீர்தலும், பிரிதலும், என்றவற்றோடு பொருந்தியது கற்பு எனப்பெறும். 185

மேற் சொல்லப் பெற்ற, களவு, கற்பு என்பன கை கோள் வகையாவன. 186

பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, சிறப்புடைய கிழவன், கிழத்தி ஆகிய அறுவரும் களவொழுக்கத்தின்கண் கூற்று நிகழ்த்துவோராக அமைவர் என்று கூறுவர். 187

பாணன், கூத்தன், விறலி, பரத்தை, உள்ளத் தெளிவுடைய அறிவர், கண்டோர் ஆகிய அறுவரும், முன்பு களவில் கூற்று நிகழ்த்துவோர் அறுவரும் சேர்த்துப் பன்னிருவர் பழைமையான நெறியையுடைய கற்பின் கூற்றுக்கு உரியர். 188

## இதுவும் அது

1447. ஊரும், அயலும், சேரியோரும்,
நோய் மருங்கு அறிநரும், தந்தையும், தன்னையும்,
கொண்டு எடுத்து மொழியப்படுதல் அல்லது
கூற்று அவண் இன்மை யாப்புறத் தோன்றும்.

## நற்றாய் கூற்றின் இயல்பு

1448. கிழவன் தன்னொடும் கிழத்தி தன்னொடும்
நற்றாய் கூறல் முற்றத் தோன்றாது.

## கண்டோர் மொழிதல்

1449. ஒண்தொடி மாதர் கிழவன் கிழத்தியொடு
கண்டோர் மொழிதல் கண்டதென்ப.

## தலைவன் கூற்றுப்பற்றிய கருத்து

1450. இடைச்சுர மருங்கில் கிழவன் கிழத்தியொடு
வழக்கியல் ஆணையின் கிளத்தற்கும் உரியன்.

## ஏனையோர் கூற்றுப்பற்றிய கருத்து

1451. ஒழிந்தோர் கிளவி கிழவன் கிழத்தியொடு
மொழிந்தாங்கு உரியர் முன்னத்தின் எடுத்தே.

## கேட்போர்

1452. மனையோள் கிளவியும், கிழவன் கிளவியும்
நினையுங் காலைக் கேட்குநர் அவரே.



ஊரில் உள்ளோரும், அயலாரும், சேர்ந்திருப்போரும், நோய்ப்பக்கம் குறிப்பால் அறிவோரும், தந்தையும், தமையனும், நேர்ந்ததை அறிந்து, பிறிதொன்றை எடுத்துக் கூறல் அல்லது நேரே கூற்றுக்கள் நிகழ்வதில்லை. 189

தலைமகன் தன்னொடும், தலைமகள் தன்னொடும் நற்றாய் கூறல் இல்லை. 190

செவிலி, நற்றாய், தோழி, தலைவன், தலைவியொடு கண்டோர் மொழிதல் இலக்கியத்துள் கண்ட மரபு என்பர். 191

உடன்போக்கில் காட்டுவழியில் தலைவன் தலைவியோடு, வழக்கு ஆணையால் பேசுதற்கு உரியன். 192

தலைவனும் தலைவியும் அல்லாதோர், மேற்கூறிய நிலையில் தலைவன் தலைவியொடு காலம் இடத்திற்குத் தகக் குறிப்பினால் பேசுவதற்கு உரியர்.

தலைவி, தலைவன் கூறுவதைக் கேட்போர் மேற்சொல்லப்பெற்ற பதின்மர். 194

### பார்ப்பார் அறிவர் கூற்றினைக் கேட்போர்

1453. பார்ப்பார், அறிவர் என்றிவர் கிளவி
யார்க்கும் வரையார் யாப்பொடு புணர்ந்தே.

### தலைவி கேட்பாளாகக் கூறும் கூற்றுக்கள்

1454. பரத்தை வாயில் என இரு வீற்றும்
கிழத்தியைச் சுட்டாக் கிளப்புப் பயனிலவே.

### வாயில்கள் கூற்றினைக் கேட்போர்

1455. வாயில் உசாவே தம்முளும் உரிய.

### மக்கள் அல்லாதோர் கேட்பனவாகக் கூறல்

1456. ஞாயிறு, திங்கள், அறிவே, நாணே,
கடலே, கானல், விலங்கே, மரனே,
புலம்புறு பொழுதே, புள்ளே, நெஞ்சே,
அவையல பிறவும் நுதலிய நெறியால்
சொல்லுந போலவும் கேட்குந போலவும்
சொல்லியாங்கு அமையும் என்மனார் புலவர்.

### களன்

1457. ஒரு நெறிப்பட்டாங்கு ஓரியல் முடியும்
கரும நிகழ்ச்சி இடம் என மொழிப.



பார்ப்பார், அறிவர் என்று சொல்லப்பெற்ற இருவர் கூற்றையும் எல்லோரும் கேட்பர். அதற்கு வரையறை இல்லை. 195

பரத்தை, வாயில் என்ற இருபகுதியாரும் தலைவியைக் கேட்பாளாகக் கருதிக் கூறாத கூற்றுக்கள், பயனில்லாதவையாகும். 196

வாயில்கள் கூற்று அவர் தம்முள்ளும் கேட்டற்குரியனவாம். 197

ஞாயிறு, திங்கள், அறிவு, நாண், கடல், கடற்கரைச் சோலை, விலங்கு, மரங்கள், பொழுது, பறவைகள், நெஞ்சு, இவையும், இவை போன்றன பிறவும், அவை பேசுவன போலவும், கேட்பனபோலவும் செய்யுள்களில் அமைதல் இயல்பாகும் என்று அறிவுடையோர் கூறுவர். 198

அகம், புறம் ஆகிய எல்லாத் திணைக்கண்ணும் அமையும் ஒழுகலாறுகள் ஒரு நெறியான் அமைந்து நிறைவேறற்குரிய நிலைக்களன் இடன் என்று கூறுவர். 199

## பொருள்

1464. இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
ஒழுக்கமும் என்று இவை இழுக்குநெறி இன்றி
இதுவாகித் திணைக்கு உரிப்பொருள் எனாது
பொதுவாய் நிற்றல் பொருள்வகை என்ப.

## துறை

1465. அவ்வவ மாக்களும் விலங்கும் அன்றிப்
பிற அவண் வரினும் திறவதின் நாடித்
தத்தம் இயலான் மரபொடு முடியின்
அத்திறந்தானே துறை எனப் படுமே.

## மாட்டு

1466. அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்
இயன்று பொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்
மாட்டு என மொழிப பாட்டியல் வழக்கின்.

## இவற்றில் சிலவற்றிற்கு முடிபு

1467. மாட்டும் எச்சமும் நாட்டல் இன்றி
உடனிலை மொழியினும் தொடர்நிலை பெறுமே.

## வண்ணம்

1468. வண்ணம் தானே நாலைந்து என்ப.





இன்பமும், துன்பமும், புணர்தலும், பிரிதலும், ஒழுக்கமும் என்று சொல்லப் பெற்றவை குற்றமின்றி, இத்திணைக்கு உரிப்பொருள் இது என்னாது எல்லாப் பொருட்கும் பொதுவாகி நிற்கும் பொருள், பொருள் வகையாம். 206

கூறப்பெற்ற ஏழு திணைக்கும் உரிய மக்களும், விலங்கும், ஏனைய கருப்பொருள்களும் தெளிவாக ஆராய்ந்து, தத்தம் இயல்புக்கு ஏற்ப மரபொடு பொருந்தி வரின், அத்திறம் தானே துறை என்று கூறப்பெறும். 207

சொற்களும், சொற்றொடர்களும் பொருள் நிலையில் சேய்மைத்தாக நிற்பினும், அண்மைத்தாக அமையினும், அப்பொருள் இயன்று முடியுமாறு கூட்டி உணர்த்தலை மாட்டு என்று கூறுவர் பாட்டியல் வழக்கில். 208

மேற்கூறிய மாட்டும் எச்சமும், இயல்பாக ஒன்றன் பின் ஒன்றாய் வந்து நாட்டுதல் இல்லாமல் உடனிலையாக மொழிந்தால் அவை தொடர்நிலைச் செய்யுள் என நிலைபெறும். 209

வண்ணம் 4 × 5 = ஆக இருபது என்று கூறுவர். 210

## அவற்றின் பெயர்

1469. அவைதாம்,
பாஅ வண்ணம், தாஅ வண்ணம்,
வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம்,
இயைபு வண்ணம், அளபெடை வண்ணம்,
நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம்,
சித்திர வண்ணம், நலிபு வண்ணம்,
அகப்பாட்டு வண்ணம், புறப்பாட்டு வண்ணம்,
ஒழுகு வண்ணம், ஒரூஉ வண்ணம்,
எண்ணு வண்ணம், அகைப்பு வண்ணம்,
தூங்கல் வண்ணம், ஏந்தல் வண்ணம்,
உருட்டு வண்ணம், முடுகு வண்ணம் என்று
ஆங்ஙனம் அறிப அறிந்திசினோரே.

## பாஅ வண்ணம்

1470. அவற்றுள்
பாஅ வண்ணம்
சொற் சீர்த் தாகி நூற்பால் பயிலும்.

## தாஅ வண்ணம்

1471. தா அ வண்ணம்
இடையிட்டு வந்த எதுகைத் தாகும்.

## வல்லிசை வண்ணம்

1472. வல்லிசை வண்ணம் வல்லெழுத்துப்பயிலும்.



வண்ணங்கள் இருபதும் பின்வருமாறு. 1. பாஅ வண்ணம் 2. தாஅ வண்ணம் 3. வல்லிசை வண்ணம் 4. மெல்லிசை வண்ணம் 5. இயைபு வண்ணம் 6. அளபெடை வண்ணம் 7. நெடுஞ்சீர் வண்ணம் 8. குறுஞ்சீர் வண்ணம் 9. சித்திர வண்ணம் 10. நலிபு வண்ணம் 11. அகப்பாட்டு வண்ணம் 12. புறப்பாட்டு வண்ணம் 13. ஒழுகு வண்ணம் 14. ஒரூஉ வண்ணம் 15. எண்ணு வண்ணம் 16. அகைப்பு வண்ணம் 17. தூங்கல் வண்ணம் 18. ஏந்தல் வண்ணம் 19. உருட்டு வண்ணம் 20. முடுகு வண்ணம் என்று இவை எனக் கூறுவர் வண்ணத்தினை அறிந்தோர். 211

கொல்லே ஐயம்; எல்லே இலக்கம்; இவை சொல்லே சீராகி நூல் பால் பயின்ற பாஅ வண்ணம். 212

தாஅ வண்ணம் இடையிட்ட எதுகையினை யுடைத்தாய் வரும். தோடாரெல்வளை ....... வாடா வவ்வரி ..... நீடாரிவண் என. 213

அறிவு அறைபோகிய பொறி அறுநெஞ்சத்து இறை முறை பிழைத்தோன், வல்லிசை வண்ணம். 214

## மெல்லிசை வண்ணம்

1473. மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே.

## இயைபு வண்ணம்

1474. இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே.

## அளபெடை வண்ணம்

1475. அளபெடை வண்ணம் அளபெடை பயிலும்.

## நெடுஞ்சீர் வண்ணம்

1476. நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்.

## குறுஞ்சீர் வண்ணம்

1477. குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும்.

## சித்திர வண்ணம்

1478. சித்திர வண்ணம்
நெடியவும் குறியவும் நேர்ந்துடன் வருமே.

## நலிபு வண்ணம்

1479. நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்.

## அகப்பாட்டு வண்ணம்

1480. அகப்பாட்டு வண்ணம்
முடியாத் தன்மையின் முடிந்ததன் மேற்றே.



பொன்னின் னன்ன புன்னை நுண்டாது; மெல்லெழுத்து மிகுந்து வந்த மெல்லிசை வண்ணம். 215

வால்வெள்ளருவி வரைமிசை யிழியவும்; இடையெழுத்து மிக்குவந்த இயைபு வண்ணம். 216

தாஅட் டாஅமரை மலருழக்கி; அளபெடை பயின்று வந்த அளபெடை வண்ணம். 217

நீரூர் பானா யாறே காடே; நெட்டெழுத்துப் பயின்று வந்த நெடுஞ்சீர் வண்ணம். 218

உறுபெய லெழிலி தொகுபெயல் பொழிய; குற்றெழுத்துப் பயின்று வந்த குறுஞ்சீர் வண்ணம். 219

ஒரூர் வாழினும் சேரி வாரார்
சேரி வரினு மார முயங்கார் (குறுந் : 231).
நெடிலும் குறிலும் சார்ந்து வந்த சித்திர வண்ணம். 220

அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை; ஆய்தம் பயின்று வந்த நலிபு வண்ணம். 221

சீர் அமைப்பினால் வண்ணத்து ஓசை நிறைவு பெறாதது போல் நின்று முடிந்ததன் மேலதாகி வரும். 'ஆறறி அந்தணர்க்கு அருமறை பலபகர்ந்து' என்ற கலிப்பா சான்று. 222

## புறப்பாட்டு வண்ணம்

1481. புறப்பாட்டு வண்ணம்
முடிந்தது போன்று முடியா தாகும்.

## ஒழுகு வண்ணம்

1482. ஒழுகு வண்ணம் ஓசையின் ஒழுகும்.

## ஒரூஉ வண்ணம்

1483. ஒரூஉ வண்ணம் ஒரீஇத் தொடுக்கும்.

## எண்ணு வண்ணம்

1484. எண்ணுவண்ணம் எண்ணுப் பயிலும்.

## அகைப்பு வண்ணம்

1485. அகைப்பு வண்ணம் அறுத்தறுத்து ஒழுகும்.

## தூங்கல் வண்ணம்

1486. தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்.

## ஏந்தல் வண்ணம்

1487. ஏந்தல் வண்ணம்
சொல்லிய சொல்லில் சொல்லியது சிறக்கும்.

## உருட்டு வண்ணம்

1488. உருட்டு வண்ணம் அராகம் தொடுக்கும்.



சீர் அமைப்பினால் வண்ணத்து ஓசை முடிவுற்றது போல நின்று முடியாத இயல்பினது. புறம், 363 சான்றாக அமையும். 223

ஒழுகு வண்ணம் ஓடைநீர் போல இடையறாது ஓசை ஒழுகிச் செல்லும். கலி. 9 சான்றாகும். 224

ஒரூஉ வண்ணம் நீங்கின தொடையாகிக் கிடப்பது; அது செந்தொடையாம். 225

நிலம், நீர், வளி, விசும்பு என்ற நான்கின் - என்று எண்ணுப் பயின்று வருவது எண்ணு வண்ணம். 226

ஓசையானது இடைஇடையே அறுத்தறுத்து நடக்கும். புறம். 232 சான்றாகும். 227

தூங்கல் வண்ணம் வஞ்சி ஓசை மிக்கு வரும். புறம் - 11 சான்றாகும். 228

சொல்லிய சொல்லானே சொல்லப்பட்ட அடியின்கண் சொல்லியது சிறந்து நிற்றல். வைகலும் வைகலை வைகும் என்று இன்புறுவார். 229

உருட்டு வண்ணம் அராகமாய் நாற்சீரடிக்கண் தொடை பெற்று நடக்கும். 230

## முடுகு வண்ணம்

1489. முடுகு வண்ணம்
அடியிறந்தோடி அதனோரற்றே.

## இவற்றின் முடிபு

1490. வண்ணம் தாமே இவையென மொழிப.

## வனப்பு – அம்மை

1491. வனப்பியல் தானே வகுக்குங் காலைச்
சின் மென் மொழியால் தாய பனுவலொடு
அம்மை தானே அடிநிமிர்பு இன்றே.

## அழகு

1492. செய்யுள் மொழியால் சீர்புனைந்துயாப்பின்
அவ்வகை தானே அழகெனப்படுமே.

## தொன்மை

1493. தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே.

## தோல்

1494. இழுமென்மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந்து ஒழுகினும்
தோல் என மொழிப தொன்மொழிப் புலவர்.

## விருந்து

1495. விருந்தே தானும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே.



முடுகு வண்ணமாவது நாற்சீரடியின் மிக்கு ஒழுகி மேற்கூறிய அராகத்தோடு ஒத்ததாகி வரும். 231

வண்ணங்களாவன மேற் சொல்லப் பெற்றவை என்று கூறுவர். 232

வனப்பியல் பற்றி வகுத்துக் கூறும் போது, சிலவாகிய மெல்லியவாகிய மொழியினால் தொடுக்கப்பெற்ற அடிகள் மிகுதியில்லாமல் வரும் செய்யுட்கள் அம்மையாம். திருக்குறள், இலக்கண நூற்பாக்கள் சான்று. 233

செய்யுட்குரிய சொல்லால், சீரைப் புனைந்து தொடுத்து வரின் அது அழகெனப்படும். எல்லாத் தனிப்பாடல்களும் இதனுள் அடங்கும். 234

தொன்மையாவது, உரைச் செய்யுளொடு பொருந்தி பழைய வரலாற்றினடிப்படையாய் வரும். சிலப்பதிகாரம். 235

ஓசை மிகுந்த சொற்களால் வாழ்க்கைக்குரிய உண்மைப் பொருள்களை, ஆசிரியப்பா போன்ற பாக்களாலும் இணைத்துக் கூறுவது தோல் என்று கூறப்பெறும் எனப் பழைமையை உணர்ந்த புலவர் கூறுவர். இதற்கும் சிலப்பதிகாரம் பொருந்தும். 236

புதியதாகி வரும் எல்லா இலக்கியங்களையும் விருந்தில் அடக்கலாம். பிரபந்தங்கள் அனைத்தும் இதனுள் அடங்கும். 237

## இயைபு

1496. ஞகாரை முதலா னகார ஈற்றுப்
புள்ளி இறுதி இயைபு எனப்படுமே.

## புலன்

1497. தெரிந்த மொழியால் செவ்விதில் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்
புலன் என மொழிப புலன் உணர்ந்தோரே.

## இழைபு

1498. ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்து அடக்காது
குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்து
ஓங்கிய மொழியான் ஆங்கனம் ஒழுகின்
இழைபின் இலக்கணம் இயைந்ததாகும்.

## புறனடை

1499. செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி
இழைத்த இலக்கணம் பிழைத்தன போல
வருவ உள எனினும் வந்தவற் றியலான்
திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே.



ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள எனப் பதினோரு புள்ளியும் ஈறாக வரும் செய்யுள் இயைபு எனப் பெறும். 238

வழக்குச் சொற்களால், தெளிவாகப் புரியும் வண்ணம், ஆராய்ந்து தெரிய வேண்டாத நிலையில் அமையும் செய்யுள் புலன் என்று கூறுவர், புலன் என்பதனை நன்கு அறிந்தோர். 239

வல்லொற்றுக்கள் பொருந்திய எழுத்துக்கள் மிகுதியாக வராது, குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்ற ஐந்தடியும் ஒத்து, எடுத்தலோசை மிக்க சொற்களால் வருவது இழைபு என அவ்விலக்கணம் உணர்ந்தோர் கூறுவர். 240

செய்யுள் பற்றி இதுவரை கூறப்பெற்ற இலக்கண நிலையில் சில தவறுடையது போல வழக்கில் வந்தாலும், ஏற்கனவே வந்தனவற்றைக் கொண்டு, வேறுபாடின்றி முடித்தல், தெளிந்த அறிவுடையோர் கடமையாம். 241